DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.358/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-5 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

--------------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| Name | : | சந்திரகமலி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.கிட்டப்பா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 01.08.2025

---

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது சென்னையில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது உடன் பிறந்த தங்கை ஆவார். ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும். எனது தங்கை திருப்பாலைக்குடியில் உள்ள வி.எம். கிளினிக்கில் வேலை பார்த்து வந்தார். அவர் வேலைக்கு செல்லும் போதும் வரும் போதும் அவளை பின்தொடர்ந்து அவளை

காதலிப்பதாக டார்ச்சர் செய்துள்ளார்.

2. ஒருமுறை என்னையும் பின்தொடர்ந்து வந்து என்னிடமும் உன் தங்கையை என்னை காதலிக்க சொல் என்று சொல்லி பேசினார். இதுசம்மந்தமாக ஸ்ரீஜா வீட்டில் எனது பெற்றோரிடமும் உறவினர்களிடமும் இது பற்றி சொன்னார். எனது அம்மா தொந்தரவாக இருந்தால் வேலைக்கு செல்லாதே என்று சொன்னதால் அவளும் சில நாட்கள் வீட்டில் தான்இருந்தாள்.

3. இது சம்மந்தமாக எனது அம்மா எனது சித்தி அ.சா.ஆ.4 வசந்தராணியிடம் சொல்லி எதிரியிடம் ஸ்ரீஜா பின்னால் வந்து தொந்தரவு செய்ய வேண்டாம் என்று கண்டிக்க சொன்னார்.அதே போல் எனது சித்தியும் எதிரியிடம் கண்டித்துள்ளார். சில நாட்கள் எந்த பிரச்சனையும் இல்லை. 3 மாதங்களுக்கு கழித்து திரும்பவும் எனதுதங்கை வேலைக்காக training செல்வதை எப்படியோ தெரிந்து கொண்டு திரும்பவும் அவரை பின் தொடர்ந்து சென்று அவரை தொந்தரவு செய்துள்ளார்.

4. கடைசியாக 17.06.2022 தேதி அதே போல் பின் தொடர்ந்து வந்ததால் எனது தங்கை நடடிவக்கை எடுக்கும் படி திருவாடானை காவல் நிலையத்தில் புகார்அளித்த விவரம் எனக்கு தெரியும். என்னை இதுசம்மந்தமாக பெண் காவலர் ஒருவர் வந்து விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.புகார்தாரர் எனது உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற காலத்தில் நான் எங்கு வேலை பார்த்து வந்தேன் என்றால் இராமநாதபுரத்தில் வேலை பார்த்து வந்தேன். சம்பவம் நடைபெற்ற காலத்தில் புகார்தாரராகிய எனது சகோதரி எங்குவேலை பார்த்து வந்தார் என்றால் இராமநாதபுரம் விஸ்வா கிளினிக்கில் வேலை பார்த்து வந்தார்.

2. எனது சகோதரியின் பணி நேரம் என்னவென்றால் காலை 9.00 மணிக்கு பணிக்கு செல்வார். மாலை 07.00 மணிக்கு பணி முடிந்து திரும்பி வருவார்.

இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்னதாகவே எதிரி எனது சகோதரியை கேலிசெய்தார் என்ற விவரம் எனது சகோதரி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரி நான் இருக்கும் போது என் பின்னாடியும் வந்து எனது சகோதரியை காதலிக்க சொல்லுங்கள் என்று பேசியுள்ளார்.

3. மேற்படி எதிரி என் பின்னாடி வந்து எனது சகோதரியை காதலிக்க சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையில் நான்சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம்தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார்கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியை திட்டி அனுப்பிவிட்டேன். வழக்கு சம்மந்தமாக புகார்தாரர் எங்கு எப்போது புகார் கொடுத்தார் என்றால் 24.06.2022 தேதி திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து புகார் கொடுத்தார்.

4. எதிரி மொபைல் போன் மூலம் என்னை தொடர்பு கொண்டு எனது தங்கையை காதலிக்க சொன்ன விவரத்தைகுறித்து போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றும் மேற்படி மொபைல்போன் பதிவேடுகளை நான் விசாரணையில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மொபைல்போனில் பதிவேடுகளை ரெகார்ட் செய்யும் வசதி இல்லை.

5. இவவழக்கு தொடர்பாக நாங்கள் புகார் கொடுப்பதற்கு முன்னதாகவே எதிரி எங்கள் குடும்பத்தார் மீது திருப்பாலைக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆனால் மேற்படி புகாரானது பொய்புகார் ஆகும். இவ்வழக்கு சம்மந்தமாக யார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் தேதி நினைவில் இல்லை. வீட்டில் வைத்து போலிசார்என்னை விசாரித்தார்கள்.

6. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும்

எனது குடும்பத்தார் தான் எதிரியை தாக்கியுள்ளனர் என்றும் அதற்கு எதிரி கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் பொய் புகார் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. வழக்கு சம்பவமானது உண்மையாக நடைபெற்று இருந்தால் நாங்கள் முன்னதாகவே புகார் கொடுத்திருப்போம் என்றும் சம்பவமானது நடைபெறாததால் தான் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.